**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 59/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 பிச்சைமுத்து - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) நான் எந்த வருடம் அரசு பணியில் சேர்ந்தேன் என்றால் 19.12.1988 ல் சேர்ந்தேன். எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 31.01.2018 ல் ஓய்வு பெற்றேன். நான் அரசு பணியில் இருந்த போது எனக்கு விவசாய வேலை இல்லை என்றால் சரியல்ல, அப்போதும் விவசாயம் செய்து வந்தேன். எனக்கு உடன்பிறந்தவர்கள் 3 பேர். எங்களுக்குள் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் பிரித்துக் கொண்டோம். எனது தகப்பனார் தாவா சொத்தில் என்ன பயிர்கள் விவசாயம் செய்தார் என்றால் நெல், கரும்பு, வாழை பயிர் செய்தேன். எனது தகப்பனார் சாகுபடி செய்ததற்கு வருவாய் துறை ஆவணங்கள் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியிருக்கிறேன். வங்கியிலும் கடன் பெற்றிருக்கிறேன். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சாகுபடி செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், தாவா சொத்தில் நான் எந்த சாகுபடியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) நானும், எனது தகப்பனாரும் விவசாயம் செய்யவில்லை என்றும், அடமானம் கடன் பத்திரம் மட்டும்தான் வாங்கினோம் என்றும், நிலத்தை எப்போதும் சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடனை திருப்பி செலுத்திய பின்னிட்டு, எனது தகப்பனாரிடம் அவர் எழுதிக் கொடுத்த அடமான கடன் பத்திரத்தை திருப்பி கேட்ட போது மறதியாக எங்கேயோ வைத்து விட்டதாகவும், தேடி எடுத்து தருவதாக சொன்னார் என்றால் சரியல்ல. பிரதிவாதி 1995 லேயே கடனை திருப்பி செலுத்தி விட்டதாலும், அவர் எழுதிக் கொடுத்த அடமான கடன் பத்திரம் காலாவதியாகி விட்டதாலும், அதை அவர் திருப்பிக் கேட்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தாமல் இருந்திருந்தால் எனது தகப்பனார் 1996 ம் வருடமே சட்ட நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல, அவருக்கு வயதாகி விட்டதால் அதுபற்றி தெரியவில்லை.

3) 1996 முதல் 2008 வரை இடைப்பட்ட காலத்தில் ஏதாவது ஆவணங்கள் வைத்திருக்கிறேனா என்றால், வருடாவருடம் குத்தகை பணம் செலுத்தி ரசீது

பெற்றுள்ளேன், அதனை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பாகம் பிரித்துக் கொண்டது சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.2 ல் எந்த வருடம் குறிப்பிட்டுள்ளது என்றால் 2010 ம் வருடம் என்று குறிப்பிட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் தேதி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 05.05.2010 என்று கண்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது அனுபவத்திலும், எனக்கு சொந்தமானது என்று கண்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 ஏக்கரில் 50 செண்ட் நிலம் என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3, 05.05.2013 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் தனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்கள் எப்போதும் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும், அதில் உள்ள கையெழுத்து அவருடையது அல்ல என்றும், நானாக தயார் செய்தது என்றால் சரியல்ல.

4) குத்தகை ரசீது என்பது பத்திரத்தில்தான் எழுதப்படும் என்றும், வா.சா.ஆ.2 மற்றும் 3 பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நம்பிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்டது. பொதுவாக குத்தகை ஆவணத்தை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான், எனக்கு தெரியவில்லை. நான் வேறு நிலம் ஏதாவது குத்தகைக்கு எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதன் அடிப்படையில் குத்தகையை நிர்ணயம் செய்தேன் என்றால், விளையும் மகசூலின் சந்தை மதிப்பை பொறுத்து நிர்ணயம் செய்வோம். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் எனது அனுபவத்தில் உள்ள சொத்து என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன காரணத்தால் பிரதிவாதி நிலத்தை குத்தகைக்கு விட்டார் என்றால், அவரால் சாகுபடி செய்யமுடியவில்லை என்றும், அருகில் எனது நிலம் இருப்பதால் எனது நிலத்தில் இருந்து நீர்ப்பாசனம் செய்து விவசாயம் செய்து கொள்ளும்படி குத்தகைக்கு விட்டார்.

5) தாவா சொத்திற்கு அருகில் எனது நிலம் இருப்பதால் தாவா சொத்தை அபகரித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் பொய்யாக ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குத்தகைதாரர் என்பதை நிரூபிக்க வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதியும், சுந்தரமூர்த்தி என்பவரும் என்ன உறவு என்றால் சகோதரர்கள். இருவருக்கும் இடையே சுமூக உறவு உள்ளதா என்றால் ஆமாம். சந்தானம் என்பவர் யார் என்றால் நடுப்பட்டியை சேர்ந்தவர், அவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது வயலுக்கு வேலைக்கு வருவார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்களை எனக்கு எப்படி தெரியும் என்றால், வயலுக்கு

வேலைக்கு வருவார்கள், அதன் அடிப்படையில் தெரியும். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் குத்தகை பணம் செலுத்தியதற்கான சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல.

6) நான் தாவா சொத்தின் குத்தகைதாரர் அல்ல என்றால் சரியல்ல, நம்பிக்கையின் அடிப்படையில் ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. 2013 ம் வருடத்திற்கு பின்னிட்டு நான் குத்தகை பணம் செலுத்தினேனா என்றால் செலுத்தினேன், நம்பிக்கையின் பேரில் எழுதி வாங்கவில்லை. உண்மையில் பணம் செலுத்தியிருந்தால் ரசீது வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு குத்தகை தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், பிரதிவாதிதான் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நானாக மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R. தமிழரசி**

**Principal District Munsif,**

**Kulithalai.**